**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5513805*
*Email - rkmcey@eureka.lk*

21.8.2006

<u>வாழ்த்துச்செய்தி</u>

இறைவனது திருப்புகழைப் பாடி மகிழ்வதற்குப் பாடல்கள் மிக அவசியமாகின்றன. அவற்றை பக்தியுணர்வுடன் பாடும்போது மனது இறைவனுடன் ஒன்றித்து இன்பம் காண்கிறது. இறைவனும் அந்த பக்தியால் ஈர்க்கப்பட்டு நெகிழ்கிறான். இதுதான் பக்தியின் நோக்கமும், பெருமையும்கூட பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், இக்கலியுகத்திலே இறைவனை அடைய தூயபக்தி ஒன்றே போதும் என்கிறார். அந்த பக்தியை வளர்த்துக் கொள்ள நாமசங்கீர்த்தனத்தில் ஈடுபடவேண்டும் எனவும் அறிவுறுத்துகிறார். அவரும் சதா பக்திப் பாடல்களைப் பாடி மகிழ்ந்ததாக அவரது வரலாற்றிலிருந்து அறிகிறோம். இந்த பாடல் தொகுப்பு நூல் அருணாசலத்தான் அகத்திலிருந்து எழுந்த பக்திப்பெருக்கின் வெளிப்பாடு ஆகும். எனவே பக்தர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அருணாசலத்தான் அவர்களுக்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்!

சுவாமி ஆத்மகனானந்தா



# அகண்டாகார அருணாசல அருவி

## எழுமின் விழிமின் உழைமின்

**வெளியீடு :**

ஸ்ரீ சிவகுரு நாத குருபீட
அறக் கட்டளை.

RangaRakes
tamilnavarasam.com

# அருணாச்சல அருவியின் கிளைகள்


01. விநாயகர் துதி
02. எழுமின் விழிமின்
03. விஸ்வநாதம்
04. மாமருந்தே
05. தாளை ஐயனே
06. ஏகம் நான்
07. ஏகமே பிரம்மமே
08. பூரணன் நீ
09. ஜீவபிரம்ம ஐக்கிய சொரூபம்
10. ஞான வரம்போ – மகா மௌனம்
11. தேவி திருமுகம்
12. கற்பகத் தாயே
13. வாணி சரஸ்வதி பாரதி
14. புது யுக கதிர்கள் சொரிவாய்
15. பாரதி சரணம்
16. விளையாட வாரும் முருகரே
17. கதிர்காம தர்பாரில் கண்டேன்
18. கதிர்காமத்தையனே நின்னைச் சரணடைந்தேன்


RangaRakes tamilnavarasam.com

19. தேர் ஏறி வாரான்
20. உன்னையல்லால்
21. வரவேணும் வரவேணும்
22. என் தலைவன் முருகன்
23. வீரத்தின் விளக்கம்
24. நல்லூர் அப்பனே
25. மெழுகாய் உருகி
26. ஓ ! என் உயிர் யாழே
27. குவலயத்தின் விழியே
28. அன்றைய யாழ்ப்பாணம்
29. வெற்றி வெற்றி
30. தமிழ்த் தாய் வாழ்த்து
31. தணியுமா என் தாகம்
32. தமிழன் – இவன் காமராஜன்
33. வாழும் உயிர்
34. வசை வருமோ உன் மேல்
35. இறைவா எனக்கோர் ஆசை
36. சேது வாயில் திறக்குதே

ஓம்

# விநாயகர் துதி

தும்பிக்கை நாயகனே அம்பிகை சுதனே
நம்பிக்கையே துணை மங்கள சுமுகனே

- **தும்பிக்கை**

விக்கின விநாயக மறையருளும்
மாதேவன் மைந்தனே தடைகள் தகர்ப்பாய்

- **தும்பிக்கை**

அகிலம் தானாய் தானே அகிலமான
பூரணப் பொருளே - யோக
ஞான மூல பிரம்ம சொரூபனே
உன்னில் என்னை ஏற்றே அருள்

- **தும்பிக்கை**

**குரு வணக்கம்**

அழியா அவித்தை அழிந்தொழிய - ஞான
விழியால் எரிக்கும் விமலன் - மொழியதனை
நெஞ்சே நினைந்துருக குருபரன்றன்
கஞ்ச மலர்த் தாளே கதி.

06.06.2006 அருணாசலத்தான்





RangaRakes tamilnavarasam.com

ஓம்

# எழுமின்

**எழுமின்! விழிமின்! உழைமின்!**

*-எழுமின்*

இமய உச்சி, விழுமிய நோக்கு,
கலையா சித்தம், மலையென ஓங்க

*-எழுமின்*

உழைப்பே உன் சீர், உறவே நாதம்,
தெளிந்த சிந்தை, ஓய்வுறாச் செயல்,
புதுயுக இலக்கணம், புதுப்புது உத்திகள்,
தாழ்விலா சக்தி. அகிலம் ஆளவே

*-எழுமின்*

தாமதியாதே, சோர்வடையாதே,
காலமோ சிறிது, கருமமோ பெரிது,
பாதையோ கடினம், பயம் கொள்ளாதே,
காரியம் சித்தி, வீறுடன் செல்வாய்

*-எழுமின்*

தர்மம் ஓங்கிடும், தயையும் பெருகிடும்,
கருணைக் கர்மம், நிகரில் வலிமை,
சிலையும் மெழுகாய், உலகெலாம் உருக்கிட,
கலையும் திருவும் என்றும் நடமிட

*-எழுமின்*

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் தத் சத் ஓம் என்றே

*-எழுமின்*

24-07-2000

அருணாசலத்தான்

ஓம்

# விஸ்வநாதம்

விஸ்வநாதம் விபும் பூரணம் - நமாமி

- **விஸ்**

பக்த அனுக்கிரக பரம கிருபா நிதே
துக்க விநாசக மங்கள தாரண

- **விஸ்**

கைலாச நாதம் நீலகண்டம்
கேதார நிவாசம் பசுபதிம்
மீனாக்ஷி ப்ரியம் சுந்தரேசம்
உமாபதிம் மகாதேவம் சிவம்

- **விஸ்**

ஆதி குரும் லோக குரும் தக்ஷிணா மூர்த்திம்
மாயா நிரோதம் ஞான சாகரம்
மோக்ஷ மூலம் சிஷ்ய அனுகூலம்
முக்தி சாதனம் ஏகம் நித்யம்

- **விஸ்**

உத்தரகாசி
14.05.2002

அருணாசலத்தான்

RangaRakes
tamilnavarasam.com

ஓம்

# மா மருந்தே

மா மருந்தே அமுத தாரை சிவமே
- *மா மருந்தே*

குறைவெல்லாம் தீர்க்கும், பிறவிப் பிணி அறுக்கும்
மாமருந்தே மழையெனப் பொழிவாய்
- *மா மருந்தே*

காலம் காலமாய் ஜென்ம ஜென்மமாய்
புன்மை சேர் புரைவினை மலையெல்லாம்
கழுவி கழுவி அருகி அருகி நிர்மலமாக்கும்
மருந்தீஸ்வரா, மாமழையெனப் பொழிவாய்
- *மா மருந்தே*

இமைய தாரை கங்கையென புரண்டு ஓடும்
சுமையான வினையிரண்டும் கரைந்தே ஓடும்
சித்த சுத்தி கைவந்தே நிர்மலமாய்க் கூடும்
முத்த அகண்ட பரிபூரண விபுவே
- *மா மருந்தே*

07.12.2003 அருணாசலத்தான்

ஓம்

# தாளை ஐயனே

தரிசனம் தாரும் தாளை ஐயனே
- *தரிசனம்*

நிதரிசனமான, நிமல மூர்த்தி
பதமலர் சூடினேன், பரம கிருபாநிதி
- *தரிசனம்*

பிழை பல செய்தேனை, பேரருளால்
கருணையோடு, வாவென அணைத்து
பெரு வெளி தன்னை, நோக்க வைத்த
ஒப்பறு தயாநிதியே, நிராம்சமே, ஏகமே
- *தரிசனம்*

ஜென்ம ஜென்மமாய், பிறந்திறந் துழன்றேன்,
இன் வழி அறியாமல், இருளினில் திரிந்தேன்
கருணைக் கடலே, வல் அரசே, தர்பார்தனில்
பெருவெளி காட்டி, அகண்டம் சேரவே
- *தரிசனம்*

அழியா அவித்தை அழித்து - உன்
ஞான விழியால், கருமக் கழிம்பு எரித்து
பேசாமல் பேசும் வேதம் அருளி
ஒளி வெள்ளத்தில், என்றும் இருந்திட
- *தரிசனம்*

அருணாசலத்தான் 06-05-2003



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# ஏகம் நான்

ஸ்ரீ இராமா கிருஷ்ணா
ஸ்ரீ இராமகிருஷ்ணா எனப் பாடு

மறை புகல் அனுபவம் சித்திக்கவே
இராமா இராமா கிருஷ்ணா கிருஷ்ணா
ஸ்ரீ இராமகிருஷ்ணா எனப்பாடு
- ஸ்ரீ இராமா

வேண்டலும் நீயே விடலும் நீயே
செய்கையும் நீயே இன்மையும் நீயே
காரணமும் நீயே காரணியும் நீயே
இம்மையும் மறுமையும் நீயே
(அதனால்)
- ஸ்ரீ இராமா

அப்பன் நிராமயன் ஸ்ரீ இராமகிருஷ்ணன்
தனை நாடி வரவேண்டி நாளும்
வழி பார்த்து விழி சோரக் காதலால்
கருணை பொங்கிக் காத்து நிற்க
- ஸ்ரீ இராமா

நானுமில்லை நீயுமில்லை பூரணமே
மும்மல முடிச்சுமில்லை மயலுமில்லை
நித்தியம் நிரஞ்சனம் நிர்மலம்
நிராமயம் நிர்க்குணம் ஏகம் நான்
(அதனால்)
- ஸ்ரீ இராமா

26.02.2002 அருணாசலத்தான்



ஓம்

# ஏகமே பிரம்மமே

ஏகமே பிரம்மமே நிர்க்குணமே
- ஏகமே

எல்லாமாய் அல்லதுமான ஒன்று
ஒன்றாகி ஒன்றாய் உள்ள
- ஏகமே

ஜென்ம வாசனைகள் அழித்து
மனமது நசித்து விருத்திகளின்றி
தானே தானாம் அத்துவித அனுபவ
ஆனந்த ஆழியில் அமிழ்ந்திடும்
- ஏகமே

கருணா சொருபமே நிர்மல பூரணமே
நீயே நானாய் - நானே நீயாய்
ஆனந்த சொருப இலட்சணமாகி
தூய நிராமயமாய் துரிய நிலையான
சச்சிதானந்த சிவமெனும்
- ஏகமே

01.12.2005 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# பூரணன் நீ

எழுவாய் எழுவாய் என் குழந்தாய்
- *எழுவாய்*

ஞான சூரியன் நீ உலகின் ஜோதி நீ
மயல் போக்கி சோம்பல் நீக்கி
- *எழுவாய்*

அச்சமில் நிலையம் காட்டி
ஆறாதார சக்தியும் கொண்டு
பாரெல்லாம் காலடியில் தலைசாய
இராஜ யோக சிம்மமாய் மிளிரவே
- *எழுவாய்*

வீர நரேந்திரன் என்றும் உன்னை
விரைவுடன் வருகென கூவி அழைக்க
திடம் கொண்ட தீரனாய் என்றும்
குன்றா நிறைவுடன் சக்திச் சிம்மமாய்
- *எழுவாய்*

அம்மை சாரதை உளம் அறிவாய்
இம்மை துயர் இடர் களைவாய்
மும்மைக்கும் முதல்வன் நீ மூலவன் நீ
செம்மை பெறு சத்தியன் நீ பூரணன் நீ
- *எழுவாய்*

24-02-2002 அருணாசலத்தான்



ஓம்

# ஜீவபிரம்ம ஐக்கிய சொரூபம்

குருவின் திருவடி தடையெல்லாம் தகர்க்கும்
குருவின் திருவடி அஞ்ஞானம் அகற்றும்
குருவின் திருவடி எல்லாம் அருளும்
குருவின் திருவடி என்றும் துணையே

பேசுவதல்ல உணர்வு, வாழ்வது தான்
தயையும் கருணையும் வெளியாகி
தரணியில் உடல் கொண்டு, சாந்தி தந்த
அகண்டாகார நித்த முத்த திருவடி வாழ்க

தான் அடங்கி, தரணி அடக்கி
நீயே நான் எனும் அகண்ட நிலையில்
குருவே எல்லாம், சர்வம் பிரமம் எனும்
பொன்னார் திருவடி என்றும் வாழ்க

கருவாகி உருவாகி, களப்பில் ஜீவப் பயிர் செய்து
ஜீவ பிரம்ம ஐக்கிய சொரூபமாய்
ஜீவானந்த லட்சண நிலையின் சுட்டாய்
என்றும் எம்முடன் நிலைத்த, திருவடி வாழ்க

21-02-2006 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# ஞான வரம்பே - மகா மௌனம்

யாழ் பாடி பெற்ற மாதவப் பேறே - போற்றி
பாழ் வாழ்வை நீறாக்கும் நெற்றிக் கண்ணாய் - போற்றி

வையம் வணங்கும் நல்லைக் குகனே - போற்றி
சைவப் பிளம்பே நையும் அடியர் உணர்வே - போற்றி
குலை நடுங்கக் கூத்தாடுவாள் நிலை ஒடுக்குவாய் - போற்றி
நிலை இல்லாமலே சுழல்வார் தம்மை நிலைநிறுத்துவாய் - போற்றி

ஆக்கிய அனைத்தும் அழிப்பாய் - போற்றி
அழித்தவையில் ஆக்கம் செய்வாய் - போற்றி
துன்பம் தந்து கர்மம் கழிப்பாய் - போற்றி
இன்பம் துன்பம் யாவும் கர்மத்துடைப்பே - போற்றி

அசுத்த மாயையை நீறாக்கும் அருட்பரையே - போற்றி
சுத்த மாயை பூட்டி சிவோகம் தந்தாய் - போற்றி
அத்துவித பொருளாம் அபேத வஸ்து - போற்றி
அபேத வஸ்து அனுபவ நிலை மௌன வைப்பே - போற்றி

மௌன வைப்பே, குணங்குறி இறந்தாய் - போற்றி
தானே அதுவாம், தத்துவப் பெரிய பொருளே - போற்றி
பெரிய பொருளே, மௌன உணர்வே - போற்றி
மௌன உணர்வு கடந்த, ஞான வரம்பே - போற்றி

ஞான வரம்பே! மௌனம்! மௌனம்! மகா மௌனம்!

07-06-2000 அருணாசலத்தான்



ஓம்

# தேவி திருமுகம்

தேவி, நீ! திகட்டாத தேன்
உன் பங்கன், வைத்தியன், நாதன்
முன் பிறந்தான், விக்கினங்கள், தகர்ப்பன்
பின் வந்தான், ஊர்சுற்றி, மயிலன்
**- தேவி**

குடும்பமோ கூட்டு
கூட்டில் தேன், பாகு, முக்கனி
ஏட்டில் எட்டாது உன் இலக்கணம்
எழுதும் ஆசையால் திருமுகம்
**- தேவி**

மயிலன் படைத்தான், படையல்க் கூட்டை
கூட்டு, கொண்டோர் - அமரர்
உம்பரும், இம்பரும், அவர்க்கிணையாமோ
மாந்தும் மனிதர், காண்பார் - அவனை
**- தேவி**

அருணாசலத்தான் 26.05.1998



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# கற்பகத் தாயே

கற்பகத் தாயே கருணாகரியே
பொற் பதத் தாழ் சரணம் சரணமம்மா
- ***கற்பக***

அருள் ஒழுகும் அகண்டம் சேர்க்கும்
நீயே நான் எனும் நயன தீட்சை சொரியும்
- ***கற்பக***

அஞ்சாதே எனும் அபய கரமும்
துஞ்சாதே எனும் பாதச் சிலம்பும்
கெஞ்சாதே எனும் திண் தோளும்
விஞ்சாதே எனும் சாந்த மனமும் நல்கும்
- ***கற்பக***

கலை நிறை நாவும் கறையறு வாழ்வும்
குறைவில் கொடையும் நிறை நிலை மனமும்
நால் மறை புகல் தூய அருட் சிந்தையும்
வல் சிறையறு அகண்ட வெளி தரும்
- ***கற்பக***

கழல் தனைக் கருதிக் கண்ணீர் சொரிந்து
கர்ம யோக தீயில் சித்தம் நீறாக்கி
அதுவுமற்று இதுவுமற்று சுட்டாமல் சுட்டி
அத்துவித சுபாவம் தரும்
- ***கற்பக***

அருணாசலத்தான் 29-01-2003



ஓம்

# வாணி சரஸ்வதி பாரதி

வாணி பாரதி சரஸ்வதி
-வாணி

நால் நிலை வாக்கின் நாயகி
சப்த மண்டல ஆதார சுருதி
-வாணி

வெள்ளைத் துகில் சொர்ண அலங்காரம்
ஞானக் காதல் காந்த வதனம்
காண்போர் உருகி அமிழும்
அமிர்த கலைப் பிரவாகம்
-வாணி

பூர்ண சந்திர ஒளி வெள்ளம்
நாதக் கலை பொழியும் சொரூபம்
வாசி யோக சுத்தமன நர்த்தகி
ஞானபீட பிரியா சரஸ்வதி
-வாணி

அள்ளி அள்ளிக் கொடுப்பார்
கொட்டிக் கொட்டி விதைப்பார்
எல்லா நிலை ஆக்கத் திறலோர்
எண்ணமெல்லாம் பொங்கும் பாரதி
-வாணி



RangaRakes tamilnavarasam.com

ஓம்

உன்னைத்தொழுவேன் அழுவேன்
அரற்றுவேன் உருகுவேன்
ஏங்குவேன் மறவேன்
பிரியேன் நினையே - மதுர
-வாணி

கையறு கவலை போக்கிடுவாய்
இருள் மன வறுமை அகற்றிடுவாய்
துன்பக் கடல் துகட்டிடுவாய்
சலனமிலா மன திடம் நல்கிடுவாய்
-வாணி

என்னை உன்னில் இழப்பேன்
நீயே தானாய் நானாவாவேன்
விவேக படுக்கை அறிவின் நிலையே
பிரம்ம ஞான அத்துவிதப் பொருளே
-வாணி

**அருணாச்சலத்தான்**



ஓம்

# புது யுக கதிர்கள் சொரிவாய்

முழுமை வளர்ச்சியின் மூலநாயகி
புதுயுக கதிர்கள் சொரிவாய்
- முழுமை

தடைகள் தகர்த்து களிப்பும் திருவும் பெற
குஞ்சரக் குருமணியே உன்பாதம் தொழுவேன்
- முழுமை

பஞ்சமும் நோயும், அறியாமை விலங்கும்
நெஞ்சக வறுமையும் கையறு கவலையுடன்
பள்ளத்தில் பரிதவிக்கும் தாழ்வுற்ற மக்கள்
பல்கலையும் பதவியும் உள்ளத் துயர்வும்
செல்வாக்கும் சொல்வாக்குடன் ஏற்றம் காண
- முழுமை

**அருணாச்சலத்தான்** **01-07-2006**





RangaRakes
tamilnavarasam.com

ஓம்

# பாரதி சரணம்

1. ஆக்கல் அறிவோர் கற்பனை வேண்டுவோர்
பாடுவார் பாரதி சரணம் போற்றி.

2. புதிய பாதைப் புதுமை, மண்ணில் விண்
சமைப்போர் ஆதார ஊற்று சரஸ்வதி கருணை.

3. சர்வம் சக்தி வலயம், தொடர் இணையம்
கொள்வதும் கொடுப்பதும் தனித்தனி தகைமை

4. வாலறிவும், அயராஉழைப்பும், சாதனையின்
செயலுருவும் சக்தி அனுகூலத்தால் விளையும்.

5. எண்ண உரு ஆக்க மையத் தூண்டல்
சக்தி வெளிப்படு வழிவகை.

6. வாதனை அடக்க வேதனை போக்க
வாணி வாலாயம் நாளும் வேண்டும் மருந்து

அருணாசலத்தான் 24.07.2006



ஓம்



# விளையாட வாரும் முருகரே

விளையாட வாரும் முருகரே
இருளோடும் மருளோடும் உலவும், என்னோடு
- விளையாட

வினை ஓடும் கரும துன்பம் ஓடும்
துணையாகி திடம் தந்து நிலையாக்கிட
- விளையாட

இருளும் மருளும் ஓட்டியே
அகண்ட வெளி ஊட்டியே
இரசவாத சித்து செய்தே
நிறை மதிப் பொருளாக்கிட
- விளையாட



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# கதிர்காம தர்பாரில் கண்டேன்

வள்ளி நாச்சியாரே வடிவேலனிடம் சொல்லவேணும்
- *வள்ளி*

பிள்ளை துயரம் தாளேன் என்று
கொள்ளை காதல் கணத்தில் கனிவாய்
- *வள்ளி*

ஆயிரம் கோடி சூரிய கதிர் வேலோன்
அண்டம் எல்லாம் நிறை விபுவாவான்
வேழம் தாங்கும் அழகு கம்பீரம்
கதிர்காம தர்பார் தனில் கண்டேன் என்று
- *வள்ளி*

கனிவாய் குழற கண்ணீர் கங்கையாக
உடல் கூச்செறிய பொறி புலன் சோர
தளிர்க் கை கூப்ப தருக் கடங்க
என்னை இழந்தேன் தாழ்தனில் தந்தேன் என்றே
- *வள்ளி*

27.07.2001 அருணாசலத்தான்



ஓம்

## கதிர்காமத்தையனே

## நின்ன்னைச் சரணடைந்தேன்

நின்னைச் சரணடைந்தேன் அகிலலோக நாயகா
*-நின்னை*

வருக வருக என அழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ வள்ளலே
*-நின்னை*

கடையிலும் கடைய வேடர் குலம் மகிழ்வோனே
கம்பீர வேழம் தாங்கும் முருகோனே
இடர்கள் தீர்க்கும் இன்ப ஊற்றே
அருள் கங்கையெனப் பாயும் கதிர்காமத்தையனே
*-நின்னை*

அரசே நின் தர்பார் அழகு கண்டேன்
அருள் பொங்கும் மாணிக்க மலை கண்டேன்
ஆணவ இருள் அழிக்கும் வேல் கண்டேன்
என்னை இழந்த சுகம் கொண்டேன்
*-நின்னை*

அலை அலையென வருவார் கோடி
பொய்யாம் புன்மை தீர்ப்பாய் என்பார் கோடி
ஐயா, அரசே, சிவக்கொழுந்தே என்பார் கோடி
உய்யவே வழி காட்டென்பார் கோடி
*-நின்னை*

காலமெல்லாம் கருத்திருத்தி கருத்தழித்து
புண்ணியா உன் அருளால் மயல் போக்கி
கண்டம் விட்டு ஒளி வெள்ளத்திருக்கும்
ஞானியர் சூழ் பூரண குருவே
*-நின்னை*

30.03.2002 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# தேர் ஏறி வாறான்

தேர் ஏறி வாறான் முருகன் நல்லைக் குமரன்
- ***தேர் ஏறி***

பார் எல்லாம் பரவசமாகுதே
கார் எனப் பொழியுதே கருணை வெள்ளம்
- ***தேர் ஏறி***

குரலும், யாழும், வீணையும், குழையுது
சியாமள மயிலும் திம், திமி என ஆடுது
சிதறிய சித்தம் ஏகமாய்க் குவியுது
சீர் எல்லாம், சிறந்து பொங்கவே
- ***தேர் ஏறி***

நீரும் நிறையுதே, நெல்லும் வளருதே
பஞ்சமும் பசியும், காலாய்ப் பறக்குதே
பாரெல்லாம் பரிவுடன் நோக்குதே
கல்வியும், தொழிலும், குன்றாகவே
- ***தேர் ஏறி***

தேவரும், மனிதரும் தொழ வந்தார்
புத்தரும், சித்தரும் புரையில் முத்தரும்
சாந்தியும், நிஷ்டையும் கூடவே
ஞானத் தேரடியில் சிலையாய் நிற்கவே
- ***தேர் ஏறி***

02.11.98 அருணாசலத்தான்

ஓம்

# உனையல்லால்

உனையல்லால் யாரிடம் சொல்வேன்
எனையாழும் ஈசனே நல்லை வாசனே
- ***உனையல்லால்***

துகளாவதும் துன்பத்தில் துடிப்பதும்,
நாளும் நடப்பது உன் தண்ணளிதானோ
- ***உனையல்லால்***

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் - உன்
கண்மலர் மூடினால் உய்வுமுண்டோ
துன்ப நிலைமாற, கடைவிழிப் பார்வை
கால் வினாடி போதுமே
- ***உனையல்லால்***

ஆடலும் பாடலும், இன்பக் கூடலும்
அறிவுத் தேடலும், ஆக்க உழைப்பும்
அமிழ்தம் அள்ளிச் சொரியும் அன்பும்
இகழ்தல் இல்லாப் பண்பும், வேண்டி
- ***உனையல்லால்***

18.11.98 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# வரவேணும் வரவேணும்

வரவேணும் வரவேணும் கந்தையா
நல்லூர்க் கந்தையா

வந்தெமக்கு அருள் தந்தால்
குறையோ ! உனக்கொரு குறையோ !

யாழ் முகாரி பாடியது போதும் ஐயா,
பாழாய், துகளாவதை முடிப்பாய் - முருகையா
சென்னீரும் கண்ணீரும் துடைக்க
உன் ஒரு கை வேண்டுமையா
- ***வரவேணும்***

அழுவதும் தொழுவதும் நீ அறியாயோ,
நாளும் படும் பாடு உனக்கவமானமிலையோ,
அம்மை மீனாட்சி சுதனே
ஷிவங்கரி போற்றும் குகனே
கைவிடல் முறையோ ! கருணையில் குறைவோ!
- ***வரவேணும்***

18.12.97 அருணாசலத்தான்



ஓம்

# என் தலைவன் முருகன்

என் தலைவன் முருகன், நல்லைக் குமரன்
- ***என் தலைவன் ....***

சொல்லொணா துன்பம் கண்டேன், அதைத் தாங்கும்,
கல்லொத்த வலுவும் தந்தான்
- ***என் தலைவன் ....***

உருக்கனைய நரம்பும், இரும்பனைய தசையும்,
மாளாத சிந்தையும், மாறாத விழுமியமும்,
தாளாத உழைப்பும், தளராத மனமும்,
நிறைவான தயையும், குறையாத அன்பும், தந்த
- ***என் தலைவன் ....***

அறிவியற் கலைகள் தந்தான்,
புத்தம் புது யுக்திகள் தந்தான்
பல் உலகின் பார்வையும், பரிவும் காட்டி,
நல் அறிவுத் திரட்சியின், அனுபவ முகிழ்ப்பும் கொண்டு
புதுப் பிறவி கண்டேன், புதுயுகம் படைப்பேன்
- ***என் தலைவன் ....***

11.05.98 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# வீரத்தின் விளக்கம்

வீரத்தின் விளக்கமே முருகா
விடுவித்து வாழ்விக்க வருவாய்
- **வீர**

தீன சரண்யா, பூர்ண குகா
தீரா வசை, உன்மேல் வருவது முறையோ
- **வீர**

எல்லாமும், எல்லார்க்கும், கொடுப்பது
உன் இலக்கணமே
இல்லாமை, இயலாமை, கொடுப்பது ஏனையா
அல்லாதவை அழித்து, வல்லாண்மை கொடுத்து
சொல்லாண்மையால், வெல்லாண்மை கொள்ள
நல்லாண்மை நல்குவாய், நல்லைக் குருமணியே
- **வீர**

15.12.97 அருணாசலத்தான்



ஓம்

# நல்லூர் அப்பனே

நல்லூர் அப்பனே வருக வருகவே
தில்லையாடி சுதனே வருக வருகவே
- **நல்லூர்**

வல்வினை தீர் சுந்தரனே வருக வருகவே
பல்கலையும் திருவும் தர வருக வருகவே
- **நல்லூர்**

கிண்கிணி ஒலிக்க திமிதிமி என வருக
தேர் ஏறி, ஆடி ஆடி வருக வருகவே
அசைந்தாடும் அழகே அரனே வருக
அருட்கடலே சிவகுகனே வருக வருகவே
- **நல்லூர்**

மங்கள சரஸ்வதி ஊற்றே வருக வருக
குபு குபு என உருண்டு புரண்டு வருகவே
அகண்டானுப மூலமே, சிவமே
ஆனந்த வெள்ளமென வருக வருகவே
- **நல்லூர்**

அருணாசலத்தான் 16.11.2002.



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# மெழுகாய் உருகி

அணைத்த வேளை எனை இழந்தேன்
குமரா நல்லைக் குருபரா

- **அணைத்த**

அமுதச் சுனையில் நனைந்து, நைந்து
மெழுகாய் உருகியது அறியாயோ

- **அணைத்த**

சொல்லும் பொருளுமற்று, செயலும் உணர்வுமற்று
கல் மனமும் கரும திறமுமற்று
கண்டம் விட்டு அகண்டமாகி
ஆனந்த பரப்பிரம்ம அனுபவம் மூடவே

- **அணைத்த**

09.11.99 அருணாசலத்தான்



ஓம்

# ஓ! என் உயிர் யாழே

ஓ ........ ஓ ......... ஓ.......
என் உயிர் யாழே
இதய கோடி வணக்கம்

வீரம் காட்டிய நிலமே
விவேகம் காட்டி எழுவாய்

***ஓ! என் ........***

வளர்க கலைகள், வளர்க தொழில்கள்,
புதிய நிலைகள், புதிய நெறிகள்,
செம்மைச் சிந்தை, செயலின் வேகம்,
வியன் உலகின், விந்தைப் படைப்பு

***ஓ! என் ........***

புதுயுக மனிதர், புதுயுகம் படைத்திட,
எழுக பொலிவுடன், தவநிலம் போற்ற,
ஒழிக அல்லல், அழிக வசைகள்,
வாழ்க வளமே வையத் துயர்ந்தே

***ஓ! என் .......***

**ஓ ........ ஓ ......... ஓம்.......**

29.04.98 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# குவலயத்தின் விழியே

குவலயத்தின் விழியே யாழ்ப்பாணம்
நிலையாய், நெறியாய், வாழும் சத்தியமே
- குவலய....

அழகு ஒழுகும், அமுதம் பெருகும்
தருமம் வளரும், புதுமை பொலியும்
- குவலய....

அவனியின் தலைவன் அகோசர சொரூபன்
தான் அதுவாம் தத்துவ இலக்கணம்
மூலம் தேடுவார் எல்லாம், ஓடுங்கும்
ஓங்கு கோபுரம் காண், நல்லைப்பதி கொண்ட
- குவலய....

பூரணப் பொருள் கண்ட முனிவர் வாழ்ந்த நன்நாடு
காலத்தை வென்ற கலைகள் கண்ட திண்நாடு
ஞாலத்தின் அறிவியல் நுட்பம் ஏற்ற வண்நாடு
சீலம் கொள் கற்றோர் மலிந்த செந்நாடு
- குவலய....



ஓம்

ஆழியின் தன்மை பார்க்கும், விண்ணின் வியாபகம் நோக்கும்
மண்ணின் நுட்பம் காணும், மனிதன் படைத்தவை எல்லாம்
ஆய்வு, அனந்தம் செய்யும், கல்விக் களம் கண்ட
மகத்தர்கள் படைக்கும், மாண் புலம் சமைக்கும்
- குவலய....

13-05-1999

அருணாசலத்தான்





RangaRakes
tamilnavarasam.com

ஓம்

# அன்றைய யாழ்ப்பாணம்

இந்தியத்தைக் கடைந்ததன் சாரம்
தமிழின் உயர் செம்மைச் சால்பின் பிம்பம்
மேற்குலகின் நவீன சிந்தையும் செயலாட்சியும்
திரண்டதன் உருவே யாழ்ப்பாணம்

சொல்வது யார்க்கும் எளிது
செயல் யார்க்கும் அரிது
தனியன் சொல்லும் செயலும் ஒன்றிவாழ்வது எளிது
சமூகம் சொல்லும் செயலும் ஒன்றிவாழ்வது அரிது
சொல்லும் செயலும் ஒன்றானது யாழ்ப்பாணம்

சக்தி வெளிப்பாடு பல்வகை
சக்தி வெளிப்பாடு அழிவு
சக்தி வெளிப்பாடு ஆக்கம்
சக்தி வெளிப்படு நிலையம் யாழ்ப்பாணம்

காலத்தின் செயற்பாடு மாற்றம்
காலத்தின் செயற்பாடு ஆக்கம்
காலத்தின் செயற்பாடு ஏற்றம்
காலத்தின் செயற்பாட்டின் கூடம் யாழ்ப்பாணம்

சிறியவை எல்லாம் சிறியன அல்ல
பெரியவை எல்லாம் பெரியன அல்ல
சிறியது, பெரியது, ஒப்புச் சொல்
சிந்தையும் செயலும் மேன்மையின் சுட்டு
செயலே மேன்மையின் அளவு



ஓம்

உயர்ந்தோர் மாட்டே உலகம்
உயர்ந்தோர் காலம் தேசம் கடந்தோர்
உயர் பொருள் தேடுவர் சான்றோர்
உயர் பொருள் கொண்டது யாழ்ப்பாணம்

தத்துவமாய் வாழ்ந்தார் பெரியோர்- உலக
தத்துவ இலக்கணம் இருடிகள் முனிவோர்
தத்துவ நூல்கள் சுட்டும் இலட்சியம்
தத்துவ வாழ்வு வாழ்ந்தது யாழ்ப்பாணம்

01.08.2000 அருணாசலத்தான்



RangaRakes
tamilnavarasam.com

ஓம்

# வெற்றி வெற்றி

வெற்றி வெற்றி என்றும் வெற்றி
தாயே! சதா! தாள் தொழுதேன்
- *வெற்றி*

நங்கையும், நம்பியும் இமயமென
ஓங்கி உயர்ந்திட உருக்கொடுக்கும் மந்திரம்
- *வெற்றி*

கல்லாமை, கவலாமை, இயலாமை, பசிப்பிணி
நில்லாமை, குறைகள் இல்லாமையாக்கும் சக்தி
- *வெற்றி*

சோதனையிலும் வேதனையிலும் நாளும்
நெஞ்சம் நிமிர்த்திட செய்திடும் விசை
- *வெற்றி*

உயர்வு தரும், உரம் தரும், உவகை தரும்,
பெயர் தரும், பீடும் பெற்றியும் தரும் ஊற்று
- *வெற்றி*

சூழ்ச்சி செய்து கூறு பல செய்வார்
தாழ் மனக் கோட்டை தகர் செய், படை
- *வெற்றி*



ஓம்

புதுயுகம் படைக்க, நவநிலை செய்வார்
மண்ணில் விண் சமைப்பர் போற்றும்
- *வெற்றி*

உயர் ஞானம் ஓம்பிடும் உலகோர்
உள்ளத் தமர்ந்து ஓங்கி முழங்கிடும் மூலம்
- *வெற்றி*

09-06-2000 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# தமிழ் தாய் வாழ்த்து

## ஒண் தமிழே உனை வாழ்த்துவனே

உலகம் உவக்க ஒளிரும் தாயே ஒண் தமிழே
உனைப் போற்றினேன் தொழுதேன் வாழ்த்துவனே
- **உலகம்**

சீர் ஆரும் மடந்தை நீ சிறப்பெலாம் உனதே
பார் ஆரும் உம்பரும் ஆராதித்து துதிக்க
- **உலகம்**

சிந்தையும் பலது செயலும் பலவே
ஒப்பறு கோயிலும் ஓங்கு கோபுரமும் உனதே
சிந்தையள்ளும் கலைகளும் கீதமும் நாட்டியமும்
சீராட்டும் அன்பின் பண்பும் காட்டும்
- **உலகம்**

இமையக் கம்பன் வான்மறை வள்ளுவன்
அறமுடைச் சிலம்பன் தாய்மை மேகலை
மறலியும் வியக்கும் அப்பர் உருக்கும் வாசகன்
அச்சமில் கீரன் விண் எனும் ஔவையைப் பெற்று
- **உலகம்**



ஓம்

திண்ணென திசையெட்டும் பரந்து
செம்மொழியென சீரொடு வாழ்
கலைவாணி சரஸ்வதி பாரதி
வாழ்க வளர்க ஓங்குக என்றும்
- **உலகம்**

ஆன்ம ஞானம் அழியாப் பொருளென
கை காட்டும் நவநீதமும் ரிபு தந்த கீதையும்
வாழ்ந்தே காட்டிய தாயுமானவனும் ரமணனும்
சேய்களெல்லாம் வாழ்கவென வாழ்த்தும்
யாழ் யோகனும் கொண்டே
- **உலகம்**

பாரதி போற்றிய ராஜரிஷி
எண்ணின் உரு ராமானுஜன்
கர்மச் சுட்டு காமராஜன்
சோறிட்ட சுப்பிரமணியத் தொண்டர் குழாம்
விண்ணென உயர்ந்த அம்பலக் கலாம்
- **உலகம்**

- *அருணாசலத்தான்*



RangaRakes

tamilnavarasam.com

ஓம்

# தணியுமா என் தாகம்

தணியுமா என் இலட்சிய தாகம்
மடியுமா கொடும் அஞ்ஞான மோகம்
- *தணியுமா*

சிந்தனை வாலறிவில் பிறந்து
செயல் எல்லாம் தெளிவில் வளர்ந்திட
- *தணியுமா*

வறுமையும் கொடுமையும் மாய்ந்திட
குறுகுறு வட்டங்கள் உடைந்திட
நிறை கருவியும் நவீன அமைப்பும்
கறைஅறு வாழ்வும் களிப்பும் மலர்ந்திட
- *தணியுமா*

எல்லோரும் பயன்படு தொழில் செய்திட
நல்லாரும் வல்லாரும் நயன்தரு வழிகாட்டிட
கல்லாரும் மற்றோரும் தசைவலி தந்திட
பல்லோரும் போற்றிடும் பார் படைத்திட
- *தணியுமா*



ஓம்

யாரும் யாருக்கும் தருதல் இல்லை
யாரும் யாரிடம் கொள்ளுதல் இல்லை
யாரும் யாருக்கும் அஞ்சுதல் இல்லை
யாரும் யாரிடமும் கெஞ்சுதல் இல்லை
- *தணியுமா*

புதுயுகம் படைத்திட புதுக்கருவிகள்
புதுயுகம் படைத்திட புதுப்புது உத்திகள்
புதுயுகம் படைத்திட நவீன அமைப்புகள்
புதுயுக சிருஷ்டிகள் மகத்தர்கள் படைத்திட
- *தணியுமா*

19.06.99 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# தமிழன் - இவன் காமராஜன்

பாரெல்லாம் புகழ் நேரு
நாளெல்லாம் சென்னிமிசை வைத்தான்
காரெனபொழி கருணைக் காந்தி
கழல் பற்றி வாழ்ந்த - காமராஜன்
- ***பாரெல்லாம்***

தாயனைய கருணையுடன் தாளண்மை வரை
ஆய்ந்து, அமுலாக்கி, விதை நாட்டி
கன்றாய், மரமாய், நல்விருட்சமாய்
கனி கொட்ட வைத்த வள்ளல் - காமராஜர்
- ***பாரெல்லாம்***

மண் பயனுற மின் தந்தவன்
கண் திறந்திட பள்ளி தந்தவன்
பசி மீட்சிக்கு அட்சய சித்தர் தந்தவன்
ஆட்சித்துறை துறவு இலக்கணம் கொண்டவன்
தமிழின் இலக்கணம் இவனென வாழ்ந்தவன் - காமராஜன்
- ***பாரெல்லாம்***

09.11.1999 அருணாசலத்தான்



ஓம்

# வாழும் உயிர்

1. எண் எழுத்து வாழும் உயிர் மூச்சு
அ∴திலார் விலங்கு நடைப்பிணம்

2. சொல் சொல்லியபடி செயல்
அ∴திலார் கௌரவம் இல் விடம்

3. சொல் காப்பான் உயிர் காப்பான்
அ∴திலார் நஞ்சனையார் கூடா உறவு

4. அறிவில் ஆற்றலில் அன்பில் உயர்ந்தோர்
கேண்மை, உயர்வோர் வேண்டும் உறவு.

5. பண்புடைமை எனப்படுவது யாதெனில்
தியாகதின் மடியில் பிறப்பது

24-07-2006 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com

ஓம்

# வசை வருமோ உன் மேல்

சோழன் கொடிச் சொந்தக் காரர்
சென்றார் தலைநகர் உள்ளே - பின்
செல்கின்றார் சிங்க உறவினர்
செல்லரித்ததடா யாழை

பின் செல்லப் பின் செல்ல - தொடர்ந்து
முன்செல் என்றே முன்னேறுவோர் ஒருபால்
தன் இடம் பொருள் எல்லாம் விட்டே
இன் உயர் காக்க ஓடும் மண்ணின் மைந்தர்

எங்கே ஓடுவார் எவ்வாறு ஓடுவார்
பொறியில் அகப்பட்டுப் பெரு மூச்செறிவார்
அச்சமுறுகின்றார் அழுகின்றார் அரற்றுவார்
ஆதரவிலா ஏதிலியர் என் செய்வார்

தம்மை நினைவரோ, தம்மின் இனிய
உறவை நினைவரோ கடந்த காலக்
கற்பனை காண்பரோ கழிவிரக்கம் கொள்வரோ
விதியை நோவரோ அன்றி மதியை நோவரோ

வேகும் உள்ளமும் பொங்கும் கோபமும்
கபடச் சிரிப்பும் சூழ்ச்சிச் சிந்தையும்
தோற்றதன் புண்ணும், எரிவலியும்
வானின்று அழிவு செய்யும் கருவும் கருத்தும்

ஓம்

உந்து அழிவுக் கலன்களும் கருவியும்
நிற்கும் நிலையும் நீசச் சிந்தையும் - கண்டு
கசிந்து கசிந்து நல்லைக் கந்தனிடம்
கண்ணீரைக் கங்கையாக்கி கடல் செய்வார்

வெற்று வெறும் கட்டடங்கள்
ஆளே இல்லா அரசும், அத்தாணி மண்டபமும்
இருள் சூழ் இல்லம், கனத்த மனம்,
பொருள் இல்லா வாழ்வும், புகல் இல்லாமலே

பல் உலகும், பாவம், பாவமென்றே
சொல்லால் சிலம்பம் ஆடுகின்றார் - ஈரமிலார்
செய்தார் ஒன்றில்லை, வைதார் அன்றி
பேய்கள் ஆடும், பாழ் மயான தாண்டவம் நிற்கவே

பண்டைப் பெருமையும், பல்கலையும், பண்பும்
வண்மையும், வாழ்வும், வளமும், திறமும்,
கானல் நீராய், கனவாய்ப் போயின்
உன் நிலை, என்னாகும், ஊர் உனை என்
சொல்லும்

சென்ற நாட்புகழும், பீடும் என்!
இறுதி என்! நாளை என்! என ஏங்கி ஏங்கி
நெஞ்சம் புண்ணாக, குறுமதி மயங்கும் வேளை
பதை பதைத்து துடி துடித்து
வரலாறு என் கூறும் - என்றே
எண்ணி எண்ணிச் சாம்புகின்றேன்.

05.08.2000 அருணாசலத்தான்

RangaRakes tamilnavarasam.com

ஓம்

# இறைவா எனக்கோர் ஆசை

**இறைவா எனக்கோர் ஆசை**
**சித்திக்க வேண்டித் தொழுவேன்**

எங்கு - எனது மனம் தூய்மையாக தளைகள் இன்றி இயங்குமோ
அங்கு செல்ல அருள்வாய்.

எங்கு - எவ்வித அச்சமுமின்றி சிந்தனை ஊறுமோ
அங்கு செல்ல அருள்வாய்.

எங்கு - உண்மையும் நேர்மையும் மேலோங்கி உள்ளதோ
அங்கு உலவிட அருள்வாய்

எங்கு - சிந்தையும் செயலும் தடையற்று எப்போதும் பரந்து விரியுமோ,
அங்கு அழைத்துச் செல்வாய்.

எங்கு - செயல்கள் சான்றாண்மையில் தளம் கொள்ளுமோ
அங்கு நிலைக்க அருள்வாய்.

எங்கு - நீ, நான், அவள், அது என்ற குறுவட்ட பேதமில்லையோ
அங்கு இருக்க அருள்வாய்.

எங்கு - சோதனையும் வேதனையும் எதிர்வரும் போது நிலைகுலையாது
திடமுடன் நிலைக்க அருள் புரிவாய்.

எங்கு - தர்க்க அறிவியல் கோலோச்சுமோ
அங்கு எனது சிந்தனை விரிய அருள் புரிவாய்.



ஓம்

எங்கு - சுயநலமும் சுய பேராசையும் மண்ணுள் ஆழப்
புதைக்கப் படுமோ அங்கு வதிய அருள் புரிவாய்.

எங்கு - நன்மை பொதுமை உழைப்பு மேலோங்குமோ
அவ் உலகில் என்னுழைப்பும் சேர அருள் புரிவாய்.

எங்கு - அராஜகமும் சுயநலமும் தாண்டவமாடுமோ
அங்கு தீரனாய் எதிர் கொள்ள அருள் புரிவாய்.

எங்கு - பணம், பொருள், தசைவலி, கும்பல் அரசியல் இல்லையோ
அங்கு என் சேவை சென்றடைய அருள் புரிவாய்.

எங்கு - சான்றோர்களும், கற்றோரும், பற்றற்றோரும்,
போற்றப்படுகிறார்களோ, வாழ்கிறார்களோ
அங்கு இருக்க அருள்வாய்.

எங்கு - இவற்றால் கலைமகளும், திருமகளும் களிப்புடன் நடம்
புரிவார்களோ அங்கு இருக்க அருள்வாய்.

எங்கு - சிந்தையெல்லாம் ஒடுங்கி, அகண்ட தியானம்
இடையூறின்றி சித்திக்குமோ, ஓ இறைவா –
அங்கு, அப்பூமியில் என்றும் இருக்க அருள் புரிவாய்.

04/01/2005 - அருணாசலத்தான்







RangaRakes tamilnavarasam.com

ஓம்

# சேது வாயில் திறக்குதே

அடி தாள, மகத்தினை மகத்தர்கள்
ஆழ் ஆழியில் பாதை படைத்திட
அரேபிய வங்கக் கடல்கள் சங்கமம்
கிழக்கும் மேற்கும் திறந்தது சேதுவில்

நூற்றொடு ஐம்பது ஆண்டுகள் சென்றன
சிந்தனைக் கருவில் பேச்சில், துயிலில்
எண்ணக் கரு உருவம் காண
கால் கோள் கண்டனர் மக்கள்

கற்பனைக் கதவுகள் திறக்கும்
காவியப் புதுமைகள் படைக்கும்
புதுமை புனைவோர் ஒருமைக் கழிப்பில்
உலகம் காணும் இன்றைய திறவு

புதுயுக எண்ணம் உருவம் காணும்
எதிர்யுக தொழில் நுட்ப அலை
கண்டதும் காணா பல்வகை அறிவு
எண்ணறு உத்திகள் வெடிக்கும்



ஓம்

இருபதோடொரு நூற்றாண்டு உதயம்
இயற்றுவோர் மாற்றுவோர் கூட்டு
உருவாக்கம் காணச் சேர்ந்திடும் கலப்புகள்
நவீனத்தில் மலர்ந்திடும் மக்கள் வாழ்வு

மாற்றம் காண விழைவோர் வல்லோர்
தடைகள் தகர்ப்போர் அறிவில் உயர்ந்தோர்
தடைகள் தாண்டி வந்தது இன்றைய உலகு
சேது தாண்டிச் செல்லும் புதிய உலகம்

சேது காவியம் ஓவியம் ஏட்டுச் சிற்பிகள்
சாதனைச் சரித்திரம் திறனுடன் படைப்போர்
காலம் கடந்தே நிலையென வாழ்வார்
கண்மணிச் சான்றோர் வாழ்க என்றும்

09.07.2005 அருணாசலத்தான்



RangaRakes tamilnavarasam.com